# இந்தியா,இலங்கை,மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் இடையே முத்தரப்பு கரையோர பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து தேசிய பாதுகாப்பு நிலை கூட்டம்

## மார்ச் 06,2014

மாலைதீவு, இலங்கை, இந்தியா இடையிலேயான,கடல் பாதுகாப்பு ஒத்துழைப்பின் மூன்றாவது தேசிய பாதுகாப்பு நிலை - மூன்று நாடுகளுக்கிடையிலான கூட்டம் , இந்தியா புதுடெல்லியில்,மார்ச் 06,2014 ல் நடத்தியது.இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. ஷிவஷங்கர்மேனன், இந்திய ப்ரதிநிதிகள் குழுவின் தலைமை பொறுப்பு மற்றும் கூட்டத்தையும் தலைமை தாங்கினார்.ஓய்வுபெற்ற படைத் தலைவர் (Col) முகமது நஜீம், பாதுகாப்பு துறை மற்றும் தேசிய பாதுகாப்பு அமைச்சர் - மாலைதீவின் ப்ரதிநிதிகள் குழுவையும்,திரு.கோடபய ராஜபக்க்ஷ, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரவை செயலாளர் - இலங்கை ப்ரதிநிதிகள் குழுவை தலைமை தாங்கினர்.மொரிஷியஸ் மற்றும் சீசெல்சு ஆகியவை விருந்தினர் நாடாக பங்கேற்றது.

திரு.மோடிசந்த் சீபாஹ், ப்ரதமர் அலுவலகத்தின் நிரந்தர செயலாளர் மொரிஷியஸ் சார்பாகவும்,தூதுவர் மௌரிஸ் லௌச்டவ்-லலென், முதன்மை செயலாளர்,வெளிவிவகார அமைச்சரவை சீசெல்சு சார்பாகவும் கலந்துகொண்டனர்.

மாலைதீவு,இலங்கை,இந்தியா இடையிலேயான ,கடல் பாதுகாப்பு ஒத்துழைப்பின் தேசிய பாதுகாப்பு நிலை,மூன்று நாடுகளுக்கு இடையிலான முதல் கூட்டம் மாலைதீவில் அக்டொபர்,2011 ல்

நடந்தது.ஜுலை 2013 ல், கொழும்பில் நடந்த இரண்டாவது கூட்டத்தில், மூன்று நாடுகளின் கடலோர பாதுகாப்பு தொடர்பான மூன்று பிரிவுகளை கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் ஒரு திட்டத்திற்கு ஒப்புக் கொண்டது.

1. சர்வதேச கடல்சார் அமைப்பு (ஐஎம்ஓ), அதன் கீழ் இயங்கும் அமைப்புகளை அணுகுதல் மூலம், கடல்சார்ந்த இணையதள விழிப்புணர்வு மேம்படுத்த முயற்சிகள் மேற்கொண்டு, நீண்ட தூர அடையாள மற்றும் கண்காணிப்பு சேவை (LRIT) , தானியங்கி அடையாள அமைப்பு (AIS) தரவு பகிர்தல் ஆகியவை,
2. பல்வேறு பறிமாண அணுகுமுறை, தேடல் மற்றும் மீட்பு, எண்ணை மாசு விடையிறுப்பு ஆகிய பகுதிகளில் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு முயற்சிகள்; மற்றும்
3. முக்கூட்டு பயிற்சிகள், சட்ட விரோத கடல் நடவடிக்கைகள் பற்றிய தகவல் தொடர்பு இணைப்புகளை பராமரிப்பது,கடல் எண்ணை மாசு தொடர்பான விடையிறுப்பு குறித்து முன்கூட்டிய திட்டங்கள் தீட்டுவது, கடல் திருட்டு தொடர்பான சட்ட மற்றும் கொள்கை ப்ரச்சினைகளில் ஒத்துழைப்பு உருவாக்குதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.

டெல்லி,மூன்றாவது பாதுகாப்பு நிலை கூட்டத்தின் போது பங்கேற்றவர்கள், அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் பல்வேறு நடவடிக்கைகள் செயல்படுத்தி முன்னேற்றம் கண்டுள்ளது மீது திருப்தி தெரிவித்தனர். நில மேற்பரப்பில் இருக்கும் நீர் பற்றிய விவரம் - ஹைட்ரொகிர.ஃபி,வருகை,வாரியம்,தேடுதல் மற்றும் கைப்பற்றுதல், ஆகியவையில் பயிற்சி,இந்திய கப்பலோட்டும் பயிற்சி கப்பல்களின் குழுவில்பயிற்சி,சிந்தனைகூடங்களுக்கு இடையே பறிமாற்றம்,சாதணை

நடவடிக்கைகளில் கூட்டு பங்கு ஆகிய பகுதிகளில் ஒத்துழைப்பு குறித்து விவாதிக்கப்பட்டது.

பங்கேற்பாளர்கள் , பணி/தொழில்நுட்ப நிலையில் உள்ள குழுக்கள் ஆகியவை ,கூட்டு நடவடிக்கைகள் செயல்படுத்துவதை துரிதப்படுத்தவும்,புதிய பகுதிகளில் ஒத்துழைப்பு குறித்து ஒரு திட்டம் தீட்டவும் விரைவில் சந்திக்குமாறு இயக்கினர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பங்காற்றிய மொரிஷியஸ் மற்றும் சீசெல்சு நாடுகளை பங்கேற்பாளர்கள் வரவேற்றனர். இந்த முயற்சியில் பங்கேற்ற மொரிஷியச் மற்றும் சீசெல்சின் பங்கு,இந்திய பெருங்கடல் பகுதியில் உள்ள பாதுகாப்பை அதிகரிக்கும் என்று குறிப்பிட்டனர்.

மாலைதீவில் நடைபெற இருக்கும் கடலோர பாதுகாப்பு ஒத்துழைப்பின் தேசிய பாதுகாப்பு நிலை கூட்டத்திற்கான நாள் தூதரக வழிமுறைகளின் கீழ் முடிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

புது டெல்லி

மார்ச் 06,2014